**செய்தி வெளியீடு எண்: 462** **நாள்: 17.07.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 16.7.2018 அன்று தலைமைச் செயலகத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் 16 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம், நூலகக் கட்டடம், ஆராய்ச்சிக்கூடம், கருத்தரங்கக்கூடம் மற்றும் தியான மண்டபம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். மேலும், சென்னையில் உலக ஜுனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியை நடுத்துவதற்காக தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் சங்கத்திற்கு 50 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளை ஊக்கப்படுத்தி, அவர்களுக்கு சிறந்த பயிற்சி அளித்து, அவர்களை தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க செய்தல், தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பதக்கங்களை வென்று தமிழகத்திற்கு பெருமை சேர்க்கும் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல், பன்னாட்டு தரத்தில் விளையாட்டு மைதானங்கள், உள் விளையாட்டு அரங்குகளை அமைத்தல், போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூர் அடுத்த மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் 16 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம், நூலகக் கட்டடம், ஆராய்ச்சிக் கூடம், கருத்தரங்கக் கூடம் மற்றும் தியான மண்டபம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இப்புதிய பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், நூலகக் கட்டடம், ஆராய்ச்சிக் கூடங்கள், கருத்தரங்கக்கூடம் மற்றும் தியான மண்டபம் ஆகியன பல்கலைக்கழக மாணவ, மாணவியர் மற்றும் இணைப்பு கல்லூரிகளில் பயிலும் அனைத்து விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்தவும், பல்வேறு சர்வதேச விளையாட்டு போட்டிகள் மற்றும் பயிற்சி முகாம்கள் நடத்துவதற்கும், அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிகளின் மூலம் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்தவும் பெரிதும் உதவும்.

தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் சங்கம் சார்பில் உலக ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டி (WSF World Junior Squash Championship) ஜுலை 18 முதல் 29 வரை சென்னையில் உள்ள ஸ்குவாஷ் அகாடமி மற்றும் சென்னை எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, கனடா, கொலம்பியா, செக் குடியரசு, எகிப்து, இங்கிலாந்து, பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஹாங்காங்–சீனா, இந்தியா, ஈரான், அயர்லாந்து, மக்காவ், மலேசியா, மெக்ஸிகோ, நியூசிலாந்து, பாகிஸ்தான், போலந்து, கத்தார், சவூதி அரேபியா, ஸ்காட்லாந்த், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா, ஸ்விட்சர்லாந்து, அமெரிக்கா மற்றும் ஜிம்பாப்வே ஆகிய 28 உலக நாடுகளிலிருந்து 171 ஸ்குவாஷ் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர். இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் 12 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.

தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் சங்கத்தின் வேண்டுகோளிற்கிணங்க, உலக ஜுனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியை சிறப்பான முறையில் நடுத்துவதற்காக தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் சங்கத்திற்கு தமிழ்நாடு அரசு 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான காசோலையினை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் சங்கத்தின் தலைவர் திரு.என். ராமச்சந்திரன் அவர்களிடம் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.பா.பாலகிருஷ்ணா ரெட்டி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு.தீரஜ்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், இ.ஆ.ப., தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் திரு.த.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் குழு உறுப்பினர் முனைவர் இரா. சுப்ரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 17.7.2018**